30th March 1965]

கனம் திரு. வெ. ராமையா : நிச்சயமாக பூனையை பிடிக்கப் போவதில்லை. எந்த ஒரு லட்சியத்தை அடைய வேண்டுமோ, அந்த லட்சியத்தை அரசாங்கம் நிச்சயமாக அடையும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : "புலி பசித்தாலும் புல்லைத் தின்னது" என்பது பழமொழி.

மாதவரம் பால் பண்ணைக் குடியேற்றத்தில் மாட்டுச் சாணத்தின் உபயோகம்

* 368 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாதவரம் பால் பண்ணையில் மாட்டுச் சாணத்தை பயனுடைய தாக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. வெ. ராமையா : மாதவரம் பால் பண்ணையிலுள்ள மாட்டுச் சாணத்தையும், மாட்டுத் தொழுவத்தில் வீணாக்கப்பட்ட தீவனத்தையும் ஒன்று சேர்த்து குழி உரம் தயாரிக்கப் பயன் படுத்தப்படுகிறது. குழி உரத்தை, பண்ணையில் வேளாண்மை வேலைகளுக்கு உபயோகிக்கிறார்கள். பண்ணைத் தேவைக்கு அதிக மாக உள்ள குழி உரத்தை, ஒரு டன் ரூபாய் 6 விதம் சில்லறை யில் அவ்வப்போது பொதுமக்களுக்கு விற்கப்படுகிறது அல்லது பொது ஏலத்தில் விற்கப்படுகிறது.

திரு. சா. கணேசன் : ஏற்கனவே இது சம்பந்தமாக வினா வந்து, விடையும் வந்திருக்கிறது. அங்கு ஏராளமான, தரமான எரு உரம் இருக்க அதைக் கொள்வோர் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, இந்த இலாகாவினர் விவசாயத் துறையினரோடு தொடர்பு கொண்டு, விவசாயத் துறையினர் கோருகின்ற நிலையிலே எங்கெங்கு அவைத் தேவைப்படும், எங்கெங்கு அனுப்பலாம் என்ப தற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்து விட்டார்களா? இல்லா விட்டால் சீக்கிரமாகச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

கனம் திரு. வெ. ராமையா : இங்கு இருக்கிற உரத்தை விவ சாய இலாகா பயன்படுத்திக் கொள்ளவேண்டும்; விவசாய இலாகா டைரக்டர்கள் கவனித்து விவசாயிகளுக்கு இந்த உரத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக் கிறது. இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள்.

Madavaram Milk Supply

* 369 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the approximate quantity of milk distributed to the public of Madras City by the Madavaram Milk Supply System;

(*b*) the selling price of milk per litre ;

(*c*) the cost of production per litre ; and

(*d*) the steps taken to reduce the loss ?